**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 97/2013**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | வெங்கடேசன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 05.11.2025.

**5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே நான் முதல் விசாரணை வாக்குமூலம் கொடுத்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டேன் என்றால் சரிதான். அதன்பிறகு தாவாவில் டி அட்டவணை சொத்தை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் கூடுதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. கூடுதலாக சேர்த்துள்ள டி அட்டவணை சொத்தை பொறுத்து ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மா பெயர் லட்சுமியம்மாள். அக்ராகரத்தில் உள்ள தாவா அ அட்டவணை சொத்து லட்சுமியம்மாளுடைய சொத்தா என்றால் அவருடைய சொத்து அல்ல எனது அப்பா எனது அம்மா லட்சுமியம்மாள் பெயரில் எழுதி வைத்த சொத்து. நான் தவறுதலாக சொல்கிறேன் என்றாலும் அந்த சொத்து லட்சுமியம்மாள் சொத்து என்றால் சரியல்ல.

3. லட்சுமி அம்மாள் 5ஆம் பிரதிவாதி விஷ்வநாதன் பெயரில் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் நான் கேள்விப்பட்டுள்ளேன். நான் டி அட்டவணை சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் அந்த சொத்தை தாவாவில் சேர்த்தது தவறானது என்றாலும் செல்லத்தக்கதல்ல என்றாலும் ஆவணத்தை எனது சகோதரர் ஆறுமுகம் மற்றும் அவரது பிள்ளைகள் வைத்துள்ளார்கள்.

4. டி அட்டவணை சொத்தை பொறுத்து வில்லங்கம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டி அட்டவணை சொத்தை எனது தாத்தா வாங்கினாரா அல்லது எனது அப்பா வாங்கினாரா அல்லது எனது அம்மா வாங்கினாரா என்றால் பரம்பரையாக வந்த சொத்து யார் வாங்கினார் என்று தெரியாது. பரம்பரையாக வந்த சொத்து என சொல்லும் நிலையில் அதற்கு பட்டா, சிட்டா, அ பதிவேடு, அடங்கல் என எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. பிரதிவாதிகளை துன்பப்படுத்த வேண்டும் என்றும் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்றும் சம்மந்தமில்லாத சொத்தை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல, குடும்ப சொத்தான எனது அம்மாக்கு வந்த சொத்தில் ஒரு பாகம் கேட்டு சேர்த்துள்ளேன். டி அட்டவணை சொத்து கூட்டுகுடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் எனது சகோதரர்களுக்கும் கூட்டு குடும்ப உறவு இல்லை என்றால் நாங்கள் தனிதனியாக இருக்கிறோம். தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் எல்லா கூட்டுகுடும்ப சொத்திலும் எனக்கு உரிமை உள்ளது. கூட்டு குடும்பம் இல்லை என்பதால் சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல கூட்டுகுடும்பம் இல்லை என்றாலும் சொத்தில் எனக்கு உரிமை உள்ளது. தவறான வழக்கு என்பதால் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல, எனக்கு சேர வேண்டிய பாகத்திற்கு வழக்கு போட்டுள்ளேன்.

(பிரதிவாதிகள் 2, 3, 6 முதல் 12 மற்றும் 14 வரையான பிரதிவாதிகள் 5ஆம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டார்கள்).

<u>13வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்ன பரிகாரம் கேட்டு தாவா தாக்கல் செய்தேன் என்றால் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்தேன். டி அட்டவணை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 165/1பி. அந்த சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அம்மா லட்சுமியம்மாளுக்கு. தற்போது அந்த டி அட்டவணை சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் எனது அம்மா பெயரில் உள்ளது. அதற்கான பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா உள்ளது தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பட்டா அது தான் என்றால் ஆமாம். அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. என் உடன்பிறந்தவர்கள் ஆறுமுகம் அவர் இறந்துவிட்டார், ரத்தினம், காந்தம்மாள் இறந்துவிட்டார், சுந்தர்ராஜன் அவரும் இறந்துவிட்டார். டி அட்டவணை சொத்து கூட்டு குடும்ப சொத்தா அல்லது தனிப்பட்ட

சொத்தா என்றால் கூட்டு குடும்ப சொத்து. நாங்கள் தனித்தனியாக வசித்து வருகிறோம். 13ஆம் பிரதிவாதி சிவாவிற்கு பாகம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.